# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**STC.No. 2/2022** L.W.3 P.W.3

| | |
|---|---|
| Name | : வெங்கடேசன் |
| Father/Husband Name | : பெரியசாமி |
| Age | : 39 |
| Village | : விருத்தாசலம் |
| Taluk | : விருத்தாசலம் |
| District | : கடலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **31.10.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1.**நான் தற்போது விருத்தாசலத்தில் வசித்து வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 இந்திரா எனது அத்தை, அ.சா.2 செந்தில் எனது அத்தை மகன். மற்ற பட்டியல் சாட்சிகள் என் ஊர்க்காரர்கள், உறவினார்கள். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த நான்கு வரூடத்திற்கு முன்பாக நான் வீட்டிலிருந்தபோது எனக்கு ஒரு நபர் போன் செய்து எனது அத்தைக்கும், அத்தை மகனுக்கும் விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் உடன் விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் அத்தை மகனின் இரண்டு கால்கலிலும் அடிப்பட்டிருந்தது. சம்பவத்தை பற்றி விசாரிக்க ஏதோ ஒரு கார் மோதியதாக சொன்னார்கள். வேறு எதுவும் சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. விபத்து ஏறப்படுத்திய வாகனத்தின் பதிவெண் மட்டும் 0239 ஆகும். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பகுதிபிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

அரசு தரப்பில் கடந்த 11.–10–2019 ம் தேதி நான் வீட்டில் இருந்ததாகவும், எனது அத்தை, அவர் மகன் மீதும் அவர்கள் இருவரும் நந்தப்பாடி கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது ஒரு கார் கவனக்குறைவாக வந்து அவர்கள் மீது மோதிவிட்டதாகவும், விபத்தை ஏற்படுத்திய நபரை பற்றி விசாரிக்க கீழ்பாதியை சேர்நத கோபிநாத் என்றும், அந்த விபத்தில் இருவருக்கும் அதிக காயம் என்றும் போலிஸார் விசாரித்தபோது விசாரணையில் அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் தெரியாது என்று உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் காரின் பதிவெண் எனக்கு நான் காவல் நிலையம் சென்றிருந்தபோது அங்கு போலிஸார் பேசிக்கொண்டிருந்ததின் பேரில் தெரியவந்தது.

எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி வழக்கு தாக்கல்செய்துள்ளேன். விபத்தை ஏற்படுத்திய காரை கோபிநாத் ஓட்டிவந்தார் என்ற விபரத்தை போலிஸார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் இல்லை. என்னுடைய அம்மா மற்றும் மாமா வெங்கடேசன் ஆகியோர்கள் சொல்லித்தான் எனக்கு தெரியும். சம்பவ இடத்தின் அருகில் ஒரு பாலம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் வேகமாக வந்து திடீரென வலது பக்கம் திரும்பிதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்றுவந்த பிறகு போலிஸார் என்னை 4, 5 மாதங்கள் கழித்துதான் விசாரித்தார்கள். விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**STC.No. 2/2022** L.W.2 P.W.**2**

| | |
|---|---|
| Name | : செந்தில் |
| Father/Husband Name | : பன்னீர்செல்வம் |
| Age | : 36 |
| Village | : பாளையங்கோட்டை |
| Taluk | : ஸ்ரீமுஷ்ணம் |
| District | : கடலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **31.10.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1.நான் தற்போது பாளையங்கோட்டையில் வசித்து ஆசாரி வேலை வசித்துவருகிறேன். அ.சா.1 இந்திரா எனது அம்மா, பட்டியல் சாட்சி 3 வெங்கடேசன் எனது மாமா, மற்ற பட்டியல் சாட்சிகள் என் ஊர்க்காரர்கள், உறவினார்கள். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 11–10–2019 ம் தேதி வெள்ளிக்கிழமை நானும், எனது அம்மா இந்திராவும் நந்தப்பாடி கோவிலுக்கு சென்றோம். இருவரும் என் வாகனத்தில் ஹீரோ ஹோண்டா ஸ்பிலண்டர் இருசக்கர வாகனத்தில் காலை 10.00 மணிக்கு சென்றுவிட்டு திரும்பி 11.00 மணிக்கு மேற்சொன்ன கோவிலை தாண்டி அங்கிருக்கும் பேருந்து நிறுத்தம் அருகில் அதாவது திட்டக்குடியிலிருந்து விருத்தாசலம் போகும்வழியில் வந்துகொண்டிருந்தபோது பின்னால் அதிவேகமாக வந்த ஒரு கார் எப்படி வந்தார் என்று தெரிவில்லை. மேற்படி அந்த காரானது என் வண்டியில் மோதி என் அம்மா ஒருபக்கம், நான் ஒரு பக்கம் விழுந்து சுயநினைவில்லாமல் இருந்தோம். எனக்கு பின்பக்க தலையிலும், காலிலும் அடிப்பட்டு விட்டது. நான் சுயநினைவு இழந்துவிட்டேன். என் அம்மாவிற்கு இடது பக்க தோள்பட்டையில் அடிப்பட்டுவிட்டது. பின்னர் அங்குள்ளவர்களும் அந்த விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுனரும் அவருடைய காரில் எங்கள் இருவரையும் விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். பின்னர் அங்கு முதல் உதவி அளித்து மேல் சிகிச்சைக்காக கடலூரில் உள்ள பாண்டியின் மருத்துவமனைக்கு சிக்சைக்கு சென்றோம். பின்னர் அங்கிருந்து எங்களை மேல் சிகிச்சைக்காக மகாத்மா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். நான் அங்கு சிகிச்சையில் ஒரு மாதம் இருந்தேன்.

2. எனக்கு சுயநினைவில்லை, எனக்கு சுய நினைவு வருவதற்குள் வலது காலில் அறுவை சிகிச்சை செய்தனர். என் பின்பக்க தலையில் அடிப்பட்டதால் அதே மருத்துவமனையில் வேறொருமருத்துவர் மூலமாக சிகிச்சை பெற்று வந்தேன். ஆனால் இன்று வரை விபத்து ஏற்படுத்திய காயத்திற்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறேன். இந்த விபத்து காரணமாகத்தான் என்னால் பேசமுடியவில்லை. வலது கையை பயண்படுத்தி உணவு உணணுவதில் சிரமமாக உள்ளது. இந்த விபத்து வழக்கு சம்மந்தமாக போலிஸார் மகாத்மா மருத்துவ மனைக்கு

வந்து என் அம்மாவிடமும், என் மாமாவிடமும் வாக்குமூலம் வாங்கினார்கள். பின்னர் இந்த விபத்தை ஏற்படுத்திய நபரை விசாரித்தபோது அவருடைய பெயர் மட்டும் கோபிநாத் என்று கூறினார்கள். அந்த வாகனத்தின் பதிவெண்.0239 ஆகும். போலிஸார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதிபிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

அரசு தரப்பில் முதல் விசாரணையில் மேற்சொன்ன சம்பவத்தை நிகழ்வுடன் சொல்லி ஆஜர் எதிரியை மட்டும் தெரியாது என்றும், ஆஜர் எதிரியின் வாகன பதிவெண் சரியாக சொல்லி அரசு தரப்பில் இருந்து விலகி விபத்தில் ஏற்பட்ட காயங்களால் தன்னால் ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டவில்லை என்பதால் அரசு தரப்பில் இருந்து எதிரியை அடையாளம் காட்டுவது சம்மந்தமாக மட்டும் இருந்து விலகி சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி வழக்கு தாக்கல்செய்துள்ளேன். விபத்தை ஏற்படுத்திய காரை கோபிநாத் ஓட்டிவந்தார் என்ற விபரத்தை போலிஸார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் இல்லை. என்னுடைய அம்மா மற்றும் மாமா வெங்கடேசன் ஆகியோர்கள் சொல்லித்தான் எனக்கு தெரியும். சம்பவ இடத்தின் அருகில் ஒரு பாலம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் வேகமாக வந்து திடீரென வலது பக்கம் திரும்பிதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்றுவந்த பிறகு போலிஸார் என்னை 4, 5 மாதங்கள் கழித்துதான் விசாரித்தார்கள். விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

**STC.No. 2/2022 L.W.1 P.W.1**

Name : இந்திரா
Father/Husband Name : பன்னீர்செல்வம்
Age : 62
Village : பாளையங்கோட்டை
Taluk : ஸ்ரீமுஷ்ணம்
District : கடலூர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **31.10.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1.நான் தற்போது பாளையங்கோட்டையில் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். பட்டியல் சாட்சி 2 செந்தில் என் மகன், பட்டியல் சாட்சி 3 வெங்கடேசன் எனது மருமகன், மற்ற பட்டியல் சாட்சிகள் என் ஊர்க்காரர்கள், உறவினார்கள். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 11–10–2019 ம் தேதி வெள்ளிக்கிழமை நானும், எனது மகன் செந்திலும் நந்தப்பாடி ராகு கேது கோவிலுக்கு இருவரும் என் மகனின் ஹீரோ ஹோண்டா வாகனத்தில் காலை 10.00 மணிக்கு சென்றுவிட்டு திரும்பி 11.00 மணிக்கு மேற்சொன்ன கோவிலை தாண்டி அங்கிருக்கும் பேருந்து நிறுத்தம் அருகில் அதாவது பெண்ணாடத்திலிருந்து விருத்தாசலம் போகும்வழியில் வந்துகொண்டிருந்தபோது பின்னால் வந்த ஒரு கார் எப்படி வந்தார் என்று தெரிவில்லை. மேற்படி அந்த காரானது என் மகனின் வண்டியில் மோதி என் மகன் ஒருபக்கம், நான் ஒரு பக்கம் விழுந்து சுயநினைவில்லாமல் இருந்தோம். என் மகனுக்கு பின்பக்க தலையிலும், வலது காலிலும் அடிப்பட்டு காலில் எலும்பு முறிந்துவிட்டது. எனக்கு வலது பக்க கையில் தோள்பட்டையில் இருந்து இடுப்புவரை அடிப்பட்டுவிட்டது. உடன் என் மகனை எந்த கார் விபத்து ஏற்படுத்தியதோ அதே காரில் என்னையும், என் மகனையும் விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றுவிட்டனர்.

2. பின்னர் என்னிடம் கைப்பேசி கேட்டபோது என் மகனின் கைப்பேசி உடைந்து சிதறிவிட்டதால் உடனேயாரிடமும் தகவல் தெரிவிக்கமுடியவில்லை. உடன் அங்கு வந்த காவலர் ஒருவர் என்னிடமிருந்து என் மகனின் கைப்பேசியை வாங்கி அதில் இருந்த சிம்கார்டை எடுத்து அவருடைய மொபைலில் போட்டு யாருக்கு தகவல்தெரிவிக்கவேண்டும் என்று என்னிடம் கேட்டார். நான் என் கொழுந்தனார் மகன் கண்ணணிடம் தகவல் தெரிவியுங்கள் என்று சொன்னேன். உடன் என் மருமகனான வெங்கடேசனுக்கு தகவல் தெரிந்து விருத்தாலசம் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டனர். பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. என் மகனுக்கு அதிக காயம் ஏற்பட்டதால் மேல் சிகிச்சைக்காக கடலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றுவிட்டனர். பின்னர் அங்கும் என் மகனுக்கு சிகிச்சை பலன் அளிக்காததால் மகாத்மா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து வலது காலில் அறுவை சிகிச்சை செய்தனர்.

பின்னர் என் மகன் தீவிர சிகிச்சை பிரிவான ஐ.சி.யூவில் 25 நாட்கள் இருந்தார்.

3. என் மகனுக்கு மண்டையில் அதிக காயம் ஏற்பட்டு மூளையில் ரத்தம் உறைந்துவிட்டது. இதனால் என் மகனின் வலது கை செயல் அற்று போய்விட்டது. வாய் திறந்து பேசமுடியாது. பிறகு அதே நிலையில் இரண்டு மாதங்கள் என் மகன் சிகிச்சையில் இருந்தார். பிறகு சிறிது சிறிதாக பேச ஆரம்பித்தார். இன்றுவரை விபத்து காரணமாக என் மகனுக்கு தலையில் ஏற்பட்ட பாதிப்பிற்கு மருத்துவ சிகிச்சை எடுத்து வருகிறோம். போலிஸார் இது சம்மந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை. விபத்தை ஏற்படுத்திய காரின் பதிவெண்.0239 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் எப்போது போட்டேன் என்று ஞாபகமில்லை. சற்று யோசித்து பார்த்தால் மேற்சொன்ன கையொப்பத்தை போலிஸாரிடம் சம்பவத்தை சொல்லி போட்டேன். புகார் **அ.சா.ஆ.1** ஆகும்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதிபிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

அரசு தரப்பில் முதல் விசாரணையில் மேற்சொன்ன சம்பவத்தை நிகழ்வுடன் சொல்லி ஆஜர் எதிரியை மட்டும் தெரியாது என்றும், ஆஜர் எதிரியின் வாகன பதிவெண் சரியாக சொல்லி புகார் வாக்குமூலம் தான்கொடுக்கவில்லை என்று சொல்லி அரசு தரப்பில் இருந்து விலகி விபத்தில் ஏற்பட்ட காயங்களால் தன்னால் ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டவில்லை என்பதால் அரசு தரப்பில் இருந்து எதிரியை அடையாளம் காட்டுவது சம்மந்தமாக மட்டும் இருந்து விலகி சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையத்தில் எழுதப்பட்ட தாளில்தான் கையொப்பம் செய்தேன். சாட்சி மீண்டும் தனக்கு சரியாக நினைவில்லை என்று கூறுகிறார். சம்பவ இடத்தில் நாங்கள் திடீரென்று வலது புறமாக திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை தாண்டி சிறிது தொலைவில் ராகு, கேது கோவில் இல்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக இழப்பீடு வழக்கும் போட்டுள்ளோம். சம்பவத்திற்கு பிறகு போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.